**17.08.2022**

**OS.No. 89/2013 PW : 1, திருமதி. மரகதவள்ளி**

**11 மற்றும் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...**

நான் மற்ற வாதிகளுக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன். 2ம் வாதியின் ஒரே மகள் நான். 1 முதல் 4 வாதிகள் வழக்கை தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞரிடம் விவரம் சொன்னார்கள். அவர்கள் வழக்கறிஞரிடம் சொன்ன விவரங்கள் மற்றும் பிராதை தாக்கல் செய்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. 1 மற்றும் 3 வாதிகளுக்கு உடல்நிலை சரியில்லாமல் வீட்டில் இருக்கிறார்கள். ஆனால் அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. 4ம் வாதியின் வாரிசுகள் தனியாக நடத்திக்கொள்கிறேன் என்று சொன்னதால் அவர்களை பிரதிவாதிகளாக சேர்த்திருக்கிறோம். 14 முதல் 16 வரையிலான பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் என்ன கூறியிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. முனுசாமி (1ம் பிரதிவாதி) 2012ல் காலமாகிவிட்டார். அந்த இறப்பிற்கு வாதிகள் அனைவரும் சென்றார்கள். அவர் இறந்த விவரம் தெரிந்திருந்தும் இறந்த நபர் மீது வாதிகள் வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்களா என்று கேட்டால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1 முதல் 4 வாதிகள் வழக்கை தாக்கல் செய்தபோது என்னுடைய பெரியம்மாவான யசோதா வாதிகளுடன் ஏன் வழக்கில் சேரவில்லை என்று கேட்டால் அவர் இறந்துவிட்டதால் வாதியாக சேரவில்லை. சர்வே எண் 503/2, 503/3பி ஆகிய சொத்துக்களை என் பாட்டியான விசாலாட்சி 1921ல் கிரையம் வாங்கினார். இன்றைய தேதி வரை அந்த சொத்துக்கள் விசாலாட்சி

பெயரில் தான் இருக்கிறது. ஏற்கனவே குறுக்கு விசாரணையில் நான் சாட்சியம் அளிக்கும் போது மேற்கூறிய இரண்டு சர்வே எண்களில் உள்ள சொத்துக்களை விசாலாட்சி மைனர் ராஜுபிள்ளை பெயரில் கிரையம் வாங்கியதாக சாட்சியம் அளித்திருக்கிறேன். அந்த சாட்சியம் தான் உண்மையானதாகும். அவர் ராஜுபிள்ளை பெயரில் சொத்தை வாங்கியதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தாயாருக்கு எப்போது திருமணம் ஆனது என்று எனக்கு தெரியாது. என் தாயாருக்கு எப்போது திருமணம் ஆனது என்று 1 மற்றும் 3 வாதிகளை கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. 1 முதல் 4 வாதிகளுக்கு 1980க்கு முன்னரே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். ராஜுபிள்ளை மற்றும் லட்சுமி எனது நேரடி பாட்டனார் மற்றும் பாட்டி ஆவார். விசாலாட்சி என்னுடைய கொள்ளுபாட்டி ஆவார். அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான கிரைய ஆவணங்கள் விசாலாட்சி பெயரில் தான் இருக்கிறது என்று சொன்னால் அதில் மைனர் ராஜுபிள்ளை பெயரும் வருகிறது. சர்வே எண் 468ல் உள்ள வீடு விசாலாட்சி பெயரில் இருக்கிறது. சர்வே எண் 503/2, 503/3பி, 804/4, 804/5 ஆகிய சொத்துக்களும் மைனர் ராஜுபிள்ளை பெயரில் இருக்கிறது. சர்வே எண் 503/2, 503/3பி-ல் உள்ள சொத்தை விசாலாட்சி ராஜுபிள்ளை பெயரில் கிரையம் வாங்கினார். நான் சொல்வது தவறு என்றும் மேற்கூறிய சர்வே எண்களில் உள்ள சொத்துக்கள் வா.சா.ஆ.1 மற்றும் 2 படி விசாலாட்சி தான்

வாங்கியிருக்கிறார் என்றால் சரியல்ல. 1ம் வாதியின் கணவர் பெயர் பக்கிரிபிள்ளை. 4ம் வாதியின் கணவர் பெயர் தெய்வசிகாமணி. என்னிடம் காட்டப்படும் 29.05.1991 தேதியிட்ட பாக ஆவணத்தில் அந்த ஆவணத்தை சார்பதிவாளரிடம் தாக்கல் செய்தவர் 1ம் வாதி அனுசுயா பெயர் இருக்கிறது. அந்த ஆவணத்தில் 1ம் வாதியின் கணவரும், 4ம் வாதியின் கணவரும் சாட்சி கையொப்பம் போட்டதாக இருக்கிறது. அவர்கள் தான் இன்னார் என்று நிரூபித்தவர்கள் என்ற இடத்திலும் கையொப்பம் போட்டிருக்கிறார்கள். ஆகவே 1ம் பிரதிவாதி என்ன பத்திரம் எழுதினார் என்று 1 முதல் 4 வாதிகளுக்கு தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1 முதல் 4 வாதிகளும் மற்றும் யசோதா ஆகிய 5 பேரும் சேர்ந்து தான் பாக ஆவணத்தை பதிவுசெய்ய சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்ததாகவும் அதை 1ம் வாதியின் கணவர் மற்றும் 4 வாதியின் கணவர் அடையாளம் காட்டியதாகவும் பாக ஆவணத்தில் இருப்பது உண்மை தான். அதற்கு பிறகு பிரச்சனை ஏற்பட்டு ஆவணத்தை வாங்காமல் வாதிகள் சென்றுவிட்டார்கள். 1 முதல் 4 மற்றும் யசோதா ஆகியோர்கள் பாகப்பிரிவினை ஆவணம் எழுதப்பட்ட அன்றே பிளாட் எண்.1ஐ வாதிகள் கிருபானந்தத்தின் மனைவி ஜோதியம்மாள் என்பவருக்கு கிரையம் கொடுத்திருக்கிறார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் அந்த கிரைய ஆவணத்திலும் அனுசுயா (1ம் வாதி) என்பவர் தான் கிரைய ஆவணத்தை பதிவுசெய்ய தாக்கல் செய்ததாக

குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்திலும் 1ம் வாதியின் கணவரும், 4ம் வாதியின் கணவரும் தான் சாட்சிகளாக கையொப்பம் போட்டுள்ளார்கள். ஆனால் ஜோதியம்மாளை இவ்வழக்கில் நாங்கள் சேர்க்கவில்லை. ஜோதியம்மாளுக்கு விற்ற விவரம் எனக்கு தெரியாததால் சேர்க்கவில்லை. சர்வே எண் 468ல் உள்ள வீட்டையும் இவ்வழக்கில் நாங்கள் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அனந்த ராமகிருஷ்ணன் என்பவர் 1ம் வாதியின் மகன் ஆவார். பாக ஆவணத்தின் படி பிளாட் எண்.2 1ம் வாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பிளாட்எண்.2ஐ பொறுத்து 1ம் வாதி அனந்த ராமகிருஷ்ணனுக்கு 16.03.2011ல் ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்துள்ளார். இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னரே அந்த விவரம் வாதிகளுக்கு தெரியும் என்று சொன்னால் வழக்கை தாக்கல்செய்த பின்னர் தான் அனந்த ராமகிருஷ்ணன் சொன்னார். அந்த ஆவணம் செல்லாது என்று பரிகாரத்தை இவ்வழக்கில் நாங்கள் கேட்கவில்லை. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் 1ம் வாதிக்கு பாக ஆவணத்தின் மூலம் கிடைத்த சொத்தை எழுதி வைத்ததாக 1ம் வாதி கூறியிருக்கிறார். 29.05.1991 தேதியிட்ட பாக ஆவணத்தை வாதிகளே நடைமுறைபடுத்திவிட்டு அது செல்லாது என்று தற்போது கோருவதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வேணுகோபால் பிளாட் எண்.1ஐ வாங்கியிருக்கிறார். அது சர்வே எண் 503/2ல் இருக்கிறது. அந்த பிளாட் எண்.1, 1991ம் வருடத்திய பாக ஆவணத்தில் இருக்கிறதா என்று கேட்டால் அந்த பாக ஆவணமே செல்லாது. பாக

ஆவணத்தில் சொத்துக்களுக்கு நான்குமால்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான ஆவணங்களை நானும், அனந்த ராமகிருஷ்ணனும் சேர்ந்து தான் வாங்கி வந்தோம். 1991 பாக ஆவணத்தில் உள்ள மனைகள் அங்கீகரிக்கப்பட்ட மனைகளா என்று கேட்டால் சர்வே எண் 503/2 உள்ள மனைகள் தான் அங்கீகரிக்கப்பட்ட மனைகள் ஆகும். அந்த பாக ஆவணத்தை நான் முழுமையாக படித்து பார்த்தேன். அதில் சர்வே எண் 503/2 மற்றும் 503/3பி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே 503/3பி-ல் உள்ள மனைகளுக்கு அங்கீகாரம் பெறவில்லை என்று நான் கூறுவது உண்மை இல்லை என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை ஆவணத்தில் உள்ள மனைகளை வாங்கியதால் 10 முதல் 12 பிரதிவாதிகளை இவ்வழக்கில் சேர்த்திருக்கிறோம். பொதுவாக டிட்டிசி.பி. அப்ரூவல் கொடுப்பதற்கு முன்னர் பொதுவான சாலை மற்றும் பூங்கா ஆகியவை இருக்கிறதா என்று பார்ப்பார்கள். பாகப்பிரிவினை ஆகாத சொத்தை பொறுத்து மனைகளாக பிரிக்க அங்கீகாரம் கொடுத்தது தவறு என்று நாங்கள் எந்த பரிகாரமும் கேட்கவில்லை. ராஜுபிள்ளையின் வாரிசுகள் என்ற முறையில் வழக்கை தாக்கல் செய்துள்ளோம். அவர் 1977ல் காலமானார். அதிலிருந்து 14 வருடம் கழித்து தான் 29.05.1991ல் பாக ஆவணம் பதிவு செய்யப்பட்டது. சர்வே எண் 503/2, 503/3பி சொத்துக்களுடன் வேறு சொத்துக்களும் பாக ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. 1991ல் இருந்து 2013 வரை ஏன் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்று கேட்டால் நாங்கள்

சென்னையில் இருந்ததால் தாக்கல் செய்யவில்லை. 1977 முதல் 2013 வரை 1ம் பிரதிவாதி தான் தாவா சொத்துக்களை அனுபவித்து வந்தாரா என்று கேட்டால் நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் அனுபவித்து வந்தோம். என் தாயார் பாகம் வேண்டும் என்று 1ம் பிரதிவாதியிடம் எப்போது சென்று கேட்டார் என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னர் என் தாயார் 1ம் பிரதிவாதியிடம் எப்போது பாகம் கேட்டார் என்றால் 2012, 2013ல் கேட்டார். பாக ஆவணத்தில் இனி பிரித்துக்கொள்ள வேண்டிய சொத்துக்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாதிகளிடமிருந்து கிரையம் வாங்கிய நபர்களை விட்டுவிட்டு பிரதிவாதிகளிடமிருந்து கிரையம் வாங்கிய நபர்களை மட்டும் இவ்வழக்கை சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொதுவாக சொத்தை கிரையம் வாங்கும்போது மூல ஆவணம் மற்றும் வில்லங்கம் பார்த்து தான் வாங்குவார்கள். 11 மற்றும் 12 பிரதிவாதிகள் பாக ஆவணம் மற்றும் அதற்கு முந்தய, பிந்தய வில்லங்க சான்றிதழை பார்த்துதான் கிரையம் வாங்கியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண் 503/2, 503/3பி-ல் உள்ள சொத்துக்களை தவிர்த்து வேறு சொத்துக்களுக்கும் 11, 12 பிரதிவாதிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையை சொல்லிவிடுவார்கள் என்பதை தவிர்ப்பதற்காகவே 1 மற்றும் 3 வாதிகளை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. ராஜுபிள்ளையின் சொத்துக்களை

அனைத்தையும் சேர்க்காததால் இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் அவசிய தரப்பினர்கள் சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே சொத்துக்களை பாகம் பிரித்துவிட்டு அதுவும் நடைமுறைக்கு வந்தபின்னர் மீண்டும் பாகம் கேட்டமுடியாது என்றால் சரியல்ல. நானும், அனந்த ராமகிருஷ்ணனும் சேர்ந்து இவ்வழக்கை தயாரித்திருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல.

**13ம் பிரதிவாதி தரப்பில் எந்த முறையிடும் இல்லை. குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.